# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:155 ★05.10.2026 ★தமிழ்நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:155 ★05.10.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai




## "இவ்வளவு காலம் நம்மை ஏமாற்றியவர்களை புறந்தள்ளுங்கள்" விஜய் வேண்டுகோள்

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், இவ்வளவு காலமாக நம்மை ஏமாற்றி வந்த, தீய சக்தியையும், தீர்ந்துபோன சக்தியையும் புறந்தள்ளுங்கள்' என தவெக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'என் நெஞ்சில் குடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம். கடந்த சட்டமன்றத் தேர்தலில், யாருக்கும் வழங்கிடாத பேரன்பையும், பெருவாரியான வாக்குகளையும் நமக்கு வாரி வழங்கி, வாகை சூடும் வரலாற்றைத் திரும்ப வைத்து, உங்களின் முதல் சேவகனாக என்னை அமர்த்திய உங்களுக்கு என் நன்றிக்கடனைத் திருப்பி அளிக்கும் நேரமிது.

உண்மையான மனசாட்சியுள்ள மக்களாட்சியை அமர்த்திய தமிழக மக்கள் அனைவருக்கும் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது மிகையாகாது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது, தமிழக மக்களாகிய உங்கள் தலைமையிலான ஆட்சி. இந்த ஆட்சி தொடர்ந்திட, மென்மேலும் வலுப்பெற உங்கள் ஆதரவு எப்போதும் தேவை. கடந்த 25ஆம் தேதி (25.09.2026) மதுராந்தகம் தொகுதியிலும், 30ஆம் தேதி (30.09.2026) தாராபுரம் தொகுதியிலும் இடைத்தேர்தலுக்காக நாம் பரப்புரை மேற்கொண்டோம். இதனைத் தொடர்ந்து கடந்த 2ஆம் தேதி (02.10.2026) மதுராந்தகம் தொகுதியிலும், இன்று(04.10.2026) தாராபுரம் தொகுதியிலும் வாகனப் பிரசாரம் மேற்கொண்டோம்.

இந்த இடைத்தேர்தல் பரப்புரைக்காக நாம் வந்தபோது, செங்கல்பட்டு மாவட்ட மக்களும், கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட மக்களும் நமக்களித்த வரவேற்பும், நம்மிடம் காட்டிய அன்பும் பாசமும் எதற்கும் நிகரில்லாதது. எக்காலத்திற்கும் என் நெஞ்சில் நிலைத்திருக்கக் கூடியது. இதற்காக எவ்வளவு நன்றி சொன்னாலும் அது மிகையாகாது. இதற்காக உங்களுக்கு வாழ்நாள் கடமைப்பட்டுள்ளோம்.

நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், இவ்வளவு காலமாக நம்மை ஏமாற்றி வந்த, தீய சக்தியையும், தீர்ந்துபோன சக்தியையும் புறந்தள்ளுவீர்கள்; மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை ஆதரிப்பீர்கள்;

மதுராந்தகம் தொகுதி மரகதம் குமரவேல் மற்றும் தாராபுரம் தொகுதி சத்தியபாமா ஆகியோருக்கு வெற்றிச் சின்னமாம் நமது விசில் சின்னத்தில் உங்களின் பொன்னானவாக்குகளை அளிப்பீர்கள் என்பதை இந்த நாடறியும். அதற்காக நான் முன்கூட்டியே உங்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மேலும், இந்தத் தேர்தல்பரப்புரைநிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் பொறுப்பாளர்கள், அமைச்சர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முழு ஒத்துழைப்பு நல்கிய தன்னார்வலர்கள் குழு, காவல் துறையினர், மருத்துவக் குழுவினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

தமிழ்நாட்டு மக்களுக்கான முதன்மை சக்தியான நாம், மக்கள் நலன்களைக் காப்பதற்காக, எதிலும், எப்போதும் சமரசம் செய்துகொள்ளவே மாட்டோம். லஞ்சம், ஊழலற்ற நேர்மையான நிர்வாகத்துடன் மனசாட்சி உள்ள மக்களாட்சியை இப்போது போலவே எப்போதும் தொடர்வோம். மீண்டும் நினைவூட்டுகிறோம்.

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதி மக்களே, நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டிய ஒரே சின்னம் உங்கள் வெற்றிச் சின்னமான விசில் சின்னம் என்பதை மறந்துவிடாதீர்கள்.' எனத் தெரிவித்துள்ளார்.

## ஒற்றை ரயில் வழித்தடத்தை இரட்டை பாதையாக்க ரயில்வே ஒப்புதல்: எல். முருகன் நன்றி

ஆடுதுறை – கும்பகோணம் – சுந்தரபெருமாள் கோவில் ரயில் வழித்தடத்தைஇரட்டை ரயில் பாதையாக மாற்ற ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்துள்ள மத்திய இணையமைச்சர் எல். முருகன், இத்திட்டம் பயணிகளின் வசதியை மேம்படுத்தி, பிராந்திய இணைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார். ஆடுதுறை – கும்பகோணம் – சுந்தரபெருமாள் கோவில் வழித்தடத்தைஇரட்டை ரயில் பாதையாக மாற்ற ரயில்வேஅமைச்சர்அஸ்வினி வைஷ்ணவ் ஒப்புதல் அளித்துள்ளார். இதற்கு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல். முருகன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன், பிரதமருக்கும்ரயில்வேஅமைச்சருக்கும் நன்றி தெரிவித்து ள்ளார். இது தொடர்பாக சமூக ஊடக எக்ஸ் தளத்தில் எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்நாட்டின் ரயில்வே உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான எனது கோரிக்கையை ஏற்று, ஆடுதுறை – கும்பகோணம் – சுந்தர பெருமாள் கோவில் இடையிலான ஒற்றை ரயில் பாதையை இரட்டை ரயில் பாதையாக மாற்றும் பணிக்கு ஒப்புதல் அளித்தமைக்காக மத்திய ரயில்வேஅமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் தொடர்ந்துமுன்னுரிமை அளித்து வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரட்டை ரயில் பாதைத் திட்டம், இப்பகுதி மக்களின் பயண வசதியை மேம்படுத்துவதுடன், ரயில் போக்குவரத்துத் திறனையும், பிராந்திய இணைப்பையும் மேலும் வலுப்படுத்தும்" என்று தெரிவித்துள்ளார்.

# "விடியல் பயணம் டூ வெற்றிப் பயணம்"

## கட்டணமில்லாப் பேருந்து சேவையின் புதிய அத்தியாயம்

காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2ஆம் தேதி முதல் தமிழ்நாடு முழுவதும் மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் வெற்றிப் பயணம் என்ற புதிய பரிமாணத்தில் அதிகாரப்பூர்வமாக விரிவாக்கம் செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. முந்தைய ஆட்சியில் விடியல் பயணம் என்ற பெயரில் சாதாரண நகரப் பேருந்துகளில் மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த இலவச பயண சலுகை, தற்போது நகர்ப்புற மற்றும் மாவட்டங்களை இணைக்கும் எக்ஸ்பிரஸ் பேருந்துகள், எல்.எஸ்.எஸ் எனப்படும் குறைந்த நிறுத்தப் பேருந்துகள், டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் புறநகர் சாதாரண பேருந்துகள் வரை பரவலாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எழும் முதன்மையான சந்தேகங்களை தீர்க்கும் வகையில் இந்த புதிய திட்டத்தின் கீழ் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்துகள், அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் தொலைதூர படுக்கை வசதி பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் தவிர்த்து, அரசு போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படும் மற்ற அனைத்து சாதாரண மற்றும்எக்ஸ்பிரஸ்பேருந்துகளிலும் மகளிர் முற்றிலும் கட்டணமின்றி பயணிக்க முடியும். குறிப்பாக, வேலை நிமித்தமாகவும் கல்விக்காகவும் பக்கத்து மாவட்டங்களுக்கு தினமும் சென்று வரும் பெண்கள் 30 கி.மீ முதல் 80 கி.மீ வரையிலான தொலைதூர எக்ஸ்பிரஸ் பேருந்துகளையும் கட்டணமின்றி பயன்படுத்தி கொள்ளலாம்.




மேலும், மலைப்பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மற்றும் பழங்குடியின பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், இதற்கு முன் 40 கி.மீ தூரம் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த மலைப்பாதை சாதாரண பேருந்து சேவை, தற்போது 40 கி.மீக்கும் அதிகமான தொலைவு இயங்கும் அனைத்து மலைப்பாதை சாதாரண பேருந்துகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற வருமான உச்சவரம்போ அல்லது ஒரு நாளைக்கு இத்தனை முறைதான் பயணிக்க வேண்டும் என்ற எல்லைகளோ எதுவுமில்லை என்பதோடு, நடத்துநரிடம் தனியாக அடையாள அட்டைகள் எதையும் காட்ட தேவையில்லை, மேலும் வழக்கமான பயணச்சீட்டு இயந்திரம் மூலம் வழங்கப்படும் "ரூ. 0" மதிப்பிலான பூஜ்ஜிய கட்டண பயணச்சீட்டை பெற்றுக்கொண்டு பெண்கள், மாணவிகள் மற்றும் திருநங்கைகள் அனைவரும் தடையின்றி பயணிக்கலாம்.

தமிழ்நாடு முழுவதும் இயங்கும் 18,413 அரசுப் பேருந்துகளில் 12,692 பேருந்துகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, தினமும் 84.32 லட்சத்திற்கும் அதிகமான மகளிர் பயனடையும் வகையில் இம்மாபெரும் கட்டணமில்லா பயண விரிவாக்கம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

## "மத்திய அரசிடம் நிதி பெற்று தாமிரபரணியை சுத்தப்படுத்த வேண்டும்" சவுமியா அன்புமணி

"மத்திய அரசிடம் நிதி பெற்று தாமிரபரணியை சுத்தப்படுத்த வேண்டும்" என்று பாமக எம்எல்ஏவும், பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவருமான சவுமியா அன்புமணி தெரிவித்தார்.

பசுமைத் தாயகம், சென்னைவாழ்நெல்லை மக்கள் நலச்சங்கம் சார்பில் தாமிரபரணியின் நலன் விரும்பிகளுக்கு பாராட்டு விழா மற்றும் விவசாயிகள் சந்திப்பு விழா திருநெல்வேலி அருகே உள்ள கிருஷ்ணாபுரத்தில் இன்று நடைபெற்றது.

புதுச்சேரி முன்னாள் அரசு செயலர் சுந்தரேசன் தலைமை வகித்தார். சென்னைவாழ்நெல்லை மக்கள் நலச்சங்க தலைவர் சைமன்ஜெயக்குமார் வரவேற்று பேசினார். பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். பாமக பொருளாளர் திலகபாமா, பசுமை தாயகம் ஒருங்கிணைப்பாளர் சீயோன்தங்கராஜ், சென்னைவாழ்நெல்லை மக்கள்நலச்சங்க பொதுச் செயலாளர் சங்கர்மணி, வழக்கறிஞர் ஷகிலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை முத்தாலங்குறிச்சி காமராசு தொகுத்து வழங்கினார்.

முன்னதாக, திருநெல்வேலியில்தாமிரபரணி ஆற்றுப் பகுதியில் ஆய்வு செய்த சவுமியா அன்புமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உற்பத்தியாகும் தாமிரபரணி வற்றாத ஜீவநதியாக உள்ளது. தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அதிகமாக தாமிரதாது உள்ளது. காசியில் பார்க்கும் அதே படித்துறையும், மண்டபங்களும் தாமிரபரணியில் உள்ளன. அதனால்தான் இதனை தென்னகத்து காசி என்கின்றனர்.

தாமிரபரணியை அதிகமாக பாதுகாத்திருக்க வேண்டும். ஆனால் இந்த நதியில் சாக்கடை கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் அதிகமாக கலக்கின்றன. லட்சக்கணக்கான லிட்டர் குடிநீர், குளிர்பான நிறுவனங்களுக்கு செல்கிறது. சாக்கடை கழிவுகள் கலப்பதால் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லை. இந்த நதியை பாதுகாக்க வேண்டும்.

ஜெர்மன் நாட்டில் இருந்து ரூ.59 கோடி கடன் வாங்கப்பட்டு, நதியை பாதுகாக்க பயன்படுத்தாமல் 7 கிலோமீட்டர் நீளத்துக்கு நடைமேடை, பூங்கா போன்றவை கட்டப்படுவதாக வரும் தகவலால் மக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

நதியில் கட்டுமானங்களை கட்டாமல் அதன் போக்கில் விட வேண்டும். புதர்கள், பூங்கா, கட்டிடங்கள் நதியின் ஓட்டத்துக்கு இடையூறாக இருப்பதால்தான் வெள்ளம் ஊருக்குள் புகுந்துவிடுகிறது.

தாமிரபரணி ஆற்றின் அருகில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படாது என்ற உறுதியை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சமீபத்தில் தெரிவித்துள்ளார். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ரூ.59 கோடி நிதியை தாமிரபரணி நதியை சீரமைக்க பயன்படுத்த வேண்டும்.

ஆற்றில் கழிவுநீர், தொழிற்சாலை கழிவுகள் கலக்காமல் தடுக்க பல்வேறு தீர்வுகளை சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். அவர்களிடம் ஆலோசித்து, தாமிரபரணி நதியை பாதுகாக்க வேண்டும். நதியை பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

தாமிரபரணியை பாதுகாக்க ஆயிரம் கோடி நிதியில் திட்டம் தயாராக உள்ளதாக சொல்கிறார்கள். அப்படி திட்டம் இருந்தால் கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

நதியில் கழிவுகளை கலப்போருக்கு தண்டனை, அபராதம் விதிக்க வேண்டும். அந்த அபராத தொகையை நதியை சுத்தமாக்க பயன்படுத்த வேண்டும். கழிவுநீர் சுத்திகரிப்புக்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.



கரைகளை பலப்படுத்தி கழிவுநீர் வருவதை தடுக்க வேண்டும்.

தாமிரபரணியை பாதுகாப்பதில் தன்னார்வர்களின் பங்களிப்பு மட்டும் போதாது. அரசு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மத்திய அரசிடம் நிதியை பெற்று, தாமிரபரணியை சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்க சட்டப்பேரவையில் தொடர்ந்து குரல் கொடுப்பேன்.

இந்தியாவின் நீர் மனிதன் என்று அழைக்கப்படும் ராஜேந்திர சிங் தாமிரபரணியை பாதுகாக்க அளித்த பரிந்துரையை செயல்படுத்த தமிழக அரசுக்கு வலியுறுத்தப்படும். சட்டப்பேரவை உறுப்பினர்கள் சிலர் அடுத்தடுத்து ராஜினாமா செய்தபோது, இடைத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று அன்புமணி கருத்து தெரிவித்தார். அந்த ஆலோசனையின்படி பொது வேட்பாளரை நிறுத்த முடியவில்லை. இடைத்தேர்தலில் பாமக யாருக்கும் ஆதரவு அளிக்கவில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில் நாங்கள் நீடிக்கிறோம்" என்றார்.

## சின்னசேலம் அருகே பெருமாள் கோயிலுக்குள் முதல்முறையாக அனுமதி பட்டியல் சமூக மக்கள் மகிழ்ச்சி

சின்னசேலம் அருகே குரால் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலில் பட்டியல் சமூக மக்கள் பிரகாரத்துக்குள் சென்று வழிபட மாற்று சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், முதல்முறையாக அவர்கள் போலீஸ் பாதுகாப்புடன் கோயிலுக்குள் சென்று வழிபாடு மேற்கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள குரால் கிராமத்தில் தனிநபருக்குச் சொந்தமான இடத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பெருமாள் கோயில் உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த கோயில் இந்து சமய அறநிலைத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

பட்டியலின மக்கள் கோயிலின் வாசலில் மட்டும் வந்து சாமி கும்பிட்டு வந்த நிலையில், கோயிலுக்குள் சென்று வழிபட அனுமதிக்கக் கோரி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதையடுத்து அங்கு வந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான 50க்கும் மேற்பட்ட போலீசார், பட்டியல் சமூக மக்கள் கோயில் பிரகாரத்துக்குள் சென்று வழிபடும் வகையில் கோயில் பூட்டை உடைத்து உள்ளே செல்ல அனுமதி அளித்தனர். இதையடுத்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வழிபாடு மேற்கொண்டனர்.

இதையறிந்த மாற்று சமுதாயத்தினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர், இதனால் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### மூத்த வழக்கறிஞர் மணிவண்ணன் தலைமையில்

## கே.ஜி.எஃப் கோரமண்டல் என்றீஸ் பகுதியில் திமுக முப்பெரும் விழா எழுச்சிமிகு கொண்டாட்டம்

கே.ஜி.எஃப் கோரமண்டல் என்றீஸ் பகுதியில் திமுக சார்பில் முப்பெரும் விழா பேரணியுடன் எழுச்சியுடன் நடைபெற்றது. மூத்த வழக்கறிஞர் திரு. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திமுக வளர்ச்சிக்காக நீண்ட காலமாகப் பாடுபட்ட முன்னோடிகளுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டது. அவர்களின் கழகப் பணிகள் மற்றும் சமூகப் பங்களிப்புகளை நினைவுகூர்ந்து பாராட்டுகள் தெரிவிக்கப் புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதுடன், பொதுமக்களுடன் இணைந்து சமூக நலப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர். விழாவில் பங்கேற்ற கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்



நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவின் தொடக்க நிகழ்வாக புரட்சியாளர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடந்த 1984ஆம் ஆண்டு மு.க. ஸ்டாலின் அவர்களால் கழகக் கொடி ஏற்றப்பட்டதாகக் கூறப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கொடிக் கம்பம் தற்போது புதுப்பிக்கப்பட்ட நிலையில், அந்தக் கொடிக்கம்பத்தில் கர்நாடக மாநில தொ.மு.ச. பொதுச்செயலாளர் திரு. இராமசாமி அவர்கள்கழகக்கொடியை ஏற்றி வைத்தார். கொடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து கழகத் தொண்டர்கள்மற்றும்நிர்வாகிகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். பின்னர் மூத்த வழக்கறிஞர்திரு. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. நிகழ்ச்சியில் கழகத்தின் பட்டன. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 15 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும் பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கல்விக்கு உதவும் வகையில் வழங்கப்பட்ட இந்தப் பொருட்களை மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக முன்னணி நிர்வாகிகள் உரையாற்றினர். அவர்கள் திராவிட இயக்கத்தின் வரலாறு, அதன் சமூகநீதி மற்றும் மக்கள் நலக் கொள்கைகள் குறித்து எடுத்துரைத்தனர். மேலும், பொதுமக்களின் தேவைகளை அறிந்து தொடர்ந்து மக்கள் நலப் பணிகளில் ஈடுபட வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசினர். கே.ஜி.எஃப் பகுதியில் கழக அமைப் கள் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். குறிப்பாக அம்பேத்கர் சிலைக்கு மரியாதை செலுத்துதல், வரலாற்றுச் சிறப்புமிக்க கொடிக்கம்பத்தில் கொடியேற்றுதல், கழக முன்னோடிகளுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பித்தல், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் வழங்குதல் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதனிடையே விழாவின் நிறைவாக தொ.மு.ச. தலைவர் திரு. சிவா அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவை சிறப்பாக நடத்த ஒத்துழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள், முன்னோடிகள் மற்றும் பொதுமக்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார். கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் பங்கேற்புடன் கே.ஜி.எஃப் கோரமண்டல் என்றீஸ் பகுதியில் நடைபெற்ற இந்த முப்பெரும் விழா, பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நிறைவடைந்தது.

## செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் நாளை திறப்பு

### பேருந்து நிலையத்தைச் சுற்றி போக்குவரத்து நெரிசல் சரி செய்யப்படுமா?

மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில் பழமை வாய்ந்த அண்ணா பேருந்து நிலையத்தை கடந்த திமுக ஆட்சியில் செங்குன்றம் பேரூராட்சி சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி 50 இலட்சம் மதிப்பீட்டிலும், பேரூராட்சி சார்பில் கூடுதல் நிதியாக ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுகட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து நிலையம் வருகின்ற அக்டோபர் 05 திங்கள்கிழமை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எம். விஜய் பிரபு உள்ளிட்ட அரசு அதிகாரிகள் திறந்து வைக்க உள்ளார்.

செங்குன்றம் பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பின்பு, பொதுமக்கள் எளிதாக பயணிக்கும் விதத்தில் சாலையோரங்களில் பேருந்து நிறுத்தப்படாமலும், செங்குன்றம் மார்க்




கெட் முதல் கூட் ரோடு வரை இருபுறங்களிலும் உள்ள சாலையோரக் கடைகளை முறைப்படுத்த வேண்டுமென்றும், பேருந்து நிலையத்தை சுற்றி ஆட்டோக்கள் போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவண்ணம் முறைப்படுத்த வேண்டுமென்றும், நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பேருந்து நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ள சென்டர் மீடியன் கற்களை அகற்றி சிக்னல் அமைத்து, பேருந்துகள் எளிதாக வெளியே சென்று சென்னை உள்ளிட்ட மற்ற பகுதிகளுக்கு செல்வதற்கு வழி ஏற்படுத்தி தர வேண்டுமென்றும் பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நத்தத்தில் வீட்டில் பீரோவை உடைத்து நகை, பணம் திருடியவர்கள் கைது கவரிங் நகைகளே இருந்ததாக வாக்குமூலம்



நத்தம் ராக்காச்சிபுரம் பகுதியில் சாகுல்அமீது என்பவர் வீட்டில் நேற்று முன்தினம் 5 பவுன் நகை, 4 லட்சம் பணம் திருடு போனதாக நத்தம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

இதையடுத்து திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட மதுரையை சேர்ந்த விஜய், ரங்கராஜன் ஆகிய இருவரையும் நத்தம் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 46 கிராம் வெள்ளி மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டது.

நகை திருடியவர்கள் தங்க நகை என அடகு கடையில் வைத்த போது அது கவரிங் நகை என்றதால் ஏமாந்து போனதாகவும் வாக்குமூலம்.





திண்டுக்கல் மாவட்டம் பழனி பஸ் நிலையத்தில் ஆக்கிரமிப்பு கடைகள் மற்றும் போதை ஆசாமிகள் பஸ் நிலையத்துக்கு வரும் பழனி முருகன் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆங்காங்கு பசுக்காக நிற்க கூட இடமில்லாமல் இப்படி தர கடைகள் மற்றும் போதை ஆசாமிகள் தொல்லை தாங்க முடியவில்லை இதை இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு கடைகளை அகற்றி போதை ஆசாமிகளை அங்கு படுக்க விடாமல் தடுக்குமாறு பக்தர்கள் சார்பாகவும் மற்றும் பொதுமக்கள் சார்பாகவும் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்

## "தேனி கோம்பை திருமலைராயப்பெருமாள் கோவிலில் புரட்டாசி 3வது சனிக்கிழமை விமரிசை"

### 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினார் கிருஷ்ணப்பா யாதவ்

தேனி மாவட்டம் கோம்பையில் ஸ்ரீரங்கநாதர்கோவில் என்று மக்களால் போற்றி வணங்கப்படும் புகழ்பெற்ற அருள்மிகு திருமலைராயப்பெருமாள் திருக்கோவிலில் புரட்டாசி திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வாக கருதப்படும் புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு, மூலவர் திருமலைராய பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகங்களும், மகா தீபாராதனைகளும் விமரிசையாக நடத்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இச்சிறப்புமிக்க நாளில் சுவாமி தரிசனம் செய்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு, ஸ்ரீ கோகுலம் நற்பணி மன்றம் சார்பில் சின்னமனூரை சேர்ந்த கிருஷ்ணப்பா யாதவ்



குடும்பத்தினர் மற்றும் தலைவர் செயலாளர் கிருஷ்ணப்பா பொருளாளர் சுந்தர் குடும்பத்தினர் இணைந்து பெருமளவில் அன்னதானம் வழங்கினர். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இடைவிடாது நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்வில், 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு உணவருந்தி சென்றனர். கடந்த 16 ஆண்டுகளாக இத்திருக்கோவிலில் கிருஷ்ணப்பா யாதவ் குடும்பத்தினர் தொடர்ந்து அன்னதானம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

சின்னமனூரை சேர்ந்த சமூக சேவகர் கிருஷ்ணப்பா யாதவ், ஏழை எளிய மக்களுக்கு தன்னலமின்றி உதவுவதோடு, கல்வி மற்றும் விளையாட்டுகளில் சாதனை படைக்கும் மாணவமாணவியருக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகையும் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறார். அத்துடன், தேனி மாவட்டத்தில் உள்ள முக்கிய திருக்கோவில்களில் அன்னதானம், கோடை காலத்தில் நீர்மோர் வழங்குதல் மற்றும் பல்வேறு கோவில் திருப்பணிகளையும் தொடர்ந்து செய்து வருகிறார். குறிப்பாக, புரட்டாசி 3வது சனிக்கிழமையில் கோம்பை திருமலைராய பெருமாள் கோவில் மட்டுமின்றி, தைப்பூச திருநாளில் மேகமலை அடிவாரத்தில் எழுந்தருளியுள்ள தென்பழனி வழிவிடும் முருகன் கோவில், கிருஷ்ண ஜெயந்தி அன்று சின்னமனூர் அருள்மிகு லட்சுமி நாராயண பெருமாள் கோவில் மற்றும் துர்காஷ்டமி நன்னாளில் சின்னமனூர் பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதுர்க்கை அம்மன் கோவில் ஆகிய புண்ணிய ஸ்தலங்களிலும் இவர் ஆண்டுதோறும் அன்னதான தொண்டினை தொடர்ந்து வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரரை சந்தித்து வாழ்த்து தெரிவித்த மாவட்ட ஆட்சியர்

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பகுதியைச் சேர்ந்த கயல்விழி இவரின் மகன் இந்திய தடகள வீரர் T.K.விஷால், ஜப்பானில் நடைபெற்ற 20வது ஆசிய பதக்கமும், ஆண்கள் தொடர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கமும் வென்ற தடகள வீரர் T.K.விஷால் அவர்களுக்கு அவரது இல்லத்திற்கு மாவட்ட நேரில் சென்று வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர். உடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயகுமாரி, மு.ஊராட்சி மன்ற



விளையாட்டுப் போட்டியில் 4× 400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் ஆட்சியர்வே.நல்லசிவன் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே. சி.வீரமணி ஆகியோர் தலைவரும் தாத்தாவுமான காமராஜ் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

## நகராட்சி சார்பில் காய்ச்சல் கண்டறியும் மருத்துவ முகாம்



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு திருவோத்தூர் கிழக்கு மாட வீதியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காய்ச்சல் கண்டறியும் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமை தமிழ்நாடு மருத்துவ சேவை கழக தலைவர் அழகு மீனா மற்றும் நகராட்சி ஆணையர் ஆண்ட்ரூஸ் வட்டார மருத்துவர் ஷர்மிளாதுப்புரவு ஆய்வாளர் மதனராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் காய்ச்சல், சக்கரை நோய், ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

## செவிலியர் பணிக்கு விண்ணப்பித்த 376 பேருக்கு முக்கிய அறிவிப்பு: விடுபட்ட சான்றிதழ்களை அக்டோபர் 4க்குள் சமர்ப்பிக்க வேண்டும்

### திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தகவல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 208 செவிலியர் (Staff Nurse) பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில், முற்றிலும் தற்காலிகமாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக திருவண்ணாமலை மாவட்ட நலவாழ்வுச் சங்க அலுவலகத்தில் கடந்த 15.09.2026 முதல் 25.09.2026 மாலை 5 மணி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் மொத்தம் 2,466 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்ததில், 376 விண்ணப்பங்களில் தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் முழுமையாக இணைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பானவிவரங்களை கீழ்கண்ட இணையதளங்களில்விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளலாம்:



1. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளம்: tiruvannamalai.nic.in

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரக இணையதளம்: tndphpm.com இணையதளங்களில் தங்களது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள விடுபட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் நகல்களை சுயசான்றொப்பமிட்டு, வரும் 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்குள் நேரில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விடுபட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் நகல்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி: மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம், செங்கம் சாலை, பழைய அரசு மருத்துவமனை வளாகம், திருவண்ணாமலை – 606601.

மேலும், இதுதொடர்பான விவரங்களுக்கு 9345478828, 6379342193 ஆகிய தொலைபேசி எண்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ளலாம். இந்தத் தகவலை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

## நல்லூர் ஊராட்சியில் அரசு நில ஆக்கிரமிப்பை மீட்டு பொதுமக்களுக்காக ஆரம்ப சுகாதார நிலையம், உடற்பயிற்சி பூங்கா உள்ளிட்டவைகளை அமைத்து தர பொதுமக்கள் மனு

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகர் முத்துமாரியம்மன் கோவில்அருகில்ஊராட்சி செயலர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பற்றாளர் பி.எஸ். அருளிடம் நல்லூர் ஊராட்சி காந்தி நகர் கலைஞர் நகரைச் சேர்ந்த சமூக ஆர்வலரும் முன்னாள் கிராமத் தலைவருமான கு.சங்கரலிங்கம் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் மனு அளித்தனர். அதில் குறிப்பிட்டதாவது, நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண் 44 மற்றும் 46இல் சுமார் ஏக்கர் 1.50 சென்ட் அரசு புறம்போக்கு நிலமான மேய்க்கால் புறம்போக்கு வகைப்பட்டில் அமையப்பெற்றுள்ளது. இந்த நிலத்தை தனி நபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து லேஅவுட் அமைத்து ரூபாய் 12 கோடிக்கு விற்க முயற்சிக்கின்றார். அதை தடுத்து நிறுத்தி ஆக்கிரமிப்பை அகற்றி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை மின் நிலையம், அரசு தபால் நிலையம், ஆண், பெண் உடற்பயிற்சி மையம், வாட்டர் டேங்க், நியாய விலைக்கடை, உதவி காவல் மையங்கள் அமைக்க இந்த இடத்தை பயன்படுத்த வேண்டுமென்றும், சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக திகழும் புழல் செங்குன்றம் ஏரிக்கு வரும் சோழவரம் ஏரி முதல் ஆலமரம் வரை உள்ள கால்வாய் கரையோரங்களில் ஆக்கிரமிப்பு செய்தவர்களை அகற்றுவதோடு, கழிவுநீரை இக்கால்வாயில் கலக்காத வண்ணம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.



### வன உயிரினங்களை பாதுகாப்போம்... இயற்கையை காப்போம்:

# திருவண்ணாமலையில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

வன உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழிடங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், திருவண்ணாமலையில் வனத்துறை சார்பில்நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.

வன உயிரின வார விழா ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8ம் தேதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது. வன உயிரினங்கள், அவற்றின் வாழிடங்கள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம், அரிய மற்றும் அழிந்து வரும் உயிரினங்களை பாதுகாத்தல், காடுகள் மற்றும் வன உயிரினங்களின் வாழிடங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இவ்விழாவின் முக்கிய நோக்கமாகும். மேலும், மனிதர்கள் மற்றும் வனஉயிரினங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குதல், வேட்டையாடுதல் மற்றும் வன உயிரினங்களின் வாழிட அழிப்பை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மீதான ஆர்வத்தை வளர்த்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுடன் வன உயிரின வார விழா நடத்தப்படுகிறது.

இதையொட்டி, திருவண்ணாமலை வன அலுவலகத்தில் இருந்து நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் 200க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், அரசு அலுவலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி பேரணியாக சென்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்து, மாணவர்களுடன் பேரணியில் கலந்து கொண்டார். மாவட்ட வன அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணி, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலை சுற்றி வந்து மீண்டும் வன அலுவலகத்தில் நிறைவு டைந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், உதவி வனபாதுகாவலர் க.வினோத்ராஜ், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் ஆர்.சீதாலட்சுமி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின்திட்ட இயக்குநர்மற்றும்உறுப்பினர் செயலர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி. இ.ஆ.ப, அவர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு. இந்த ஆய்வு நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.நப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார். தமிழகம் முழுவதும் சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களிலும் மற்ற பிற மாவட்டங்களிலும் மழைக்கால காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்திட மாவட்டங்கள் தோறும் உயர் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இராணிப்பேட்டை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு முன்னெச்ச ரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி. இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து. வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் பிரத்தியேக காய்ச்சல் வார்டினை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள் மருத்துவர்களிடம் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்காக உள்ள மருத்துவ வசதிகள், மருந்து மாத்திரைகள் ஆகியவைகள் குறித்து கேட்டறிந்தார். காய்ச்சல் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர்களிடம் காய்ச்சல் குறித்தும் வழங்கப்படும் சிகிச்சைகள், உணவு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும் உடல் நலன் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் நிலவரம். தற்போது சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைக்கு தங்க மோதிரம் அணிவித்து. குழந்தைக்கும் தாய்க்கும் வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து, இரத்த வங்கியில் இரத்த இருப்புகள், இரத்த வகைகள் குறித்தும். எச்ஐவி ஏஆர்டி மையத்தினையும் பார்வையிட்டு கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் அவர்கள் தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த மாதங்களில் டெங்கு/காய்ச்சல் பாதிப்புகள் குறித்தும், தற்போதைய பாதிப்புகள் குறித்தும் ஒப்பிட்டு பார்த்து, அதற்கான காரணங்கள். எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, டெங்கு ஒழிப்புப் பணிகளை முறையாக கண்காணிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.



முன்னதாக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் அவர்கள் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் காய்ச்சல் பிரிவு, உள்நோயாளிகள் / புற நோயாளிகள் பிரிவு. குழந்தைகள் வார்டு உள்ளிட்டவற்றை ஆய்வு மேற்கொண்டார்கள். காய்ச்சல் சிகிச்சை மற்றும் பதிவேடுகள், மருந்து இருப்புகள் குறித்தும், பரிசோதனை மையத்தில் நாள்தோறும் வரும் இரத்த மாதிரிகள் குறித்தும் கேட்டறிந்தார். நாள்தோறும் சராசரியாக 40 மாதிரிகள் வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அரக்கோணம் ஏபிஎம் சர்ச் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகளில் பொதுமக்கள் பிடித்து வைத்திருந்த குடம் பெரிய பாத்திரங்களில் உள்ள தண்ணீரில் டெங்கு கொசு புழு உள்ளதா என்பதை வீடு வீடாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பின்னர் பொதுமக்களிடம் நகராட்சி கொசு ஒழிப்பு பணியாளர்கள் நாள்தோறும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்கின்றனரா என்பதை கேட்டறிந்தார். தொடர்ந்து கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் நாள்தோறும் பணி மேற்கொள்வதை கேட்டறிந்து பதிவேடுகளை ஆய்வு செய்தார்கள். டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரிக்காமல் தொடர்ந்து கவனமுடன் பணிகளை செய்ய வேண்டும் என பணியாளர்களை கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, அப்பகுதியில் நடைபெற்று வந்த டெங்கு விழிப்புணர்வு மற்றும் காய்ச்சல் கண்டறியும் முகாமினை பார்வையிட்டு காய்ச்சல் பாதிப்புகள், சிகிச்சைகள் குறித்தும், பரிசோதனை விவரம் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் பொழுது இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. சரவண குமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு. செந்தில்குமார் மருத்துவர்கள் ,மற்றும் செவிலியர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் ஆய்வு

தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவர் முனைவர்.மகேஷ் குமார் அகர்வால் ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற நிலைமை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார், இணை ஆணையாளர் மருத்துவர்ஆர்.சிவகுமார், துணை ஆணையாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் சட்ட ஒழுங்கு குறித்தும் கொலைக் குற்றம் உட்பட அனைத்து குற்ற வழக்குகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும் கஞ்சா, குட்கா போன்ற போதைப்பொருட்களின் நடமாட்டத்தை குறைப்பது தொடர்பானநடவடிக்கைகள் குறித்தும், சாலை விபத்துகளைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், இணையவழி குற்றங்கள் குறித்தும், மோசடி நபர்களின் வங்கி கணக்குளை முடக்கம் செய்தல் மற்றும் நிதிசார் புலன் விசாரணை தொடர்பாகவும் அறிவுரை வழங்கினார். சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பது குறித்தும் அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும், முக்கிய வழக்குகளில் குற்றவாளிகளின்நீதிமன்ற பிணைகளை ரத்து செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், பிடியாணைகளை நிறைவேற்றுதல் சம்மந்தமாகவும், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், நடை ரோந்து (Foot Patrol) சம்மந்தமாகவும் மற்றும் கிராம விழிப்புணர்வு கண்காணிப்பு குழு ஏற்படுத்துதல் சம்மந்தமாகவும் ஆய்வு செய்து அறிவுரைகளை வழங்கினார்.

மேலும் ஆவடி காவல் ஆணையரகத்தில் சிறப்பாக பணியாற்றிய 20 காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் திறம்பட்ட காவல் பணியை பாராட்டி வெகுமதிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கியும், காவல் ஆளிநர்களின் குறைகளை கேட்டறிந்தும் இது தொடர்பாக அவர்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார்.

# புள்ளிலையன் ஊராட்சி ரங்கா கூட்டுறவு நகர் / ரங்கா கார்டன் குடியிருப்போர் நலச் சங்க குழு சார்பில் மனு

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சி மகளிர் குழு கட்டிடத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி செயலர் பொன்னையன் தலைமையேற்க, திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட நலஅலுவலர்பி.செந்தில்குமார், புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், பற்றாளர் சுலோக்சனா, கிராம நிர்வாக அலுவலர் லோகேஷ் ஆகியோரிடம் புள்ளிலையன் ஊராட்சிக் குட்பட்ட ரங்காகூட்டுறவு நகர்/ரங்காகார்டன்குடியிருப்போர் நலச் சங்கக் குழு தலைவர் ஜி.காட்டுராஜ், செயலாளர் ரீமா பிந்து, துணைத்தலைவர் ரவி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் கீழ்க்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினர்.

ரங்கா கார்டன் பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகள், குறுக்குச் சாலைகளை சீரமைக்க வேண்டுமென்றும், சிமெண்ட் / கான்கிரீட் சாலை வசதி இல்லாத பகுதிகளில் முறையான சிமெண்ட் / கான்கிரீட் சாலைகள் அமைத்து தர வேண்டுமென்றும், இந்தப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான,

போதுமான பஞ்சாயத்து குடிநீர்விநியோகிக்க வேண்டுமென்றும், சேதமடைந்துள்ள அனைத்து தெரு விளக்குகளையும் உடனடியாக சீரமைத்து தரவும், வெளிச்சம் இல்லாத பகுதிகளில் புதிய மின்கம்பங்களை ஏற்படுத்துத் தரவும், தெரு பெயர் பலகைகள் இல்லாத அனைத்து இடங்களிலும் முறையான தெருப் பெயர் பலகைகளை அமைத்து தரவும், இப்பகுதியில் உள்ள இரண்டு பூங்காக்களையும் முறையாக புதுப்பித்து பராமரிக்கவும், உடைந்துள்ள அனைத்து உபகரணங்களையும் பழுது பார்க்கவோ அல்லது தேவையான இடங்களில் புதிய உபகரணங்களை அமைத்து தர வேண்டுமென்றும்,



மின்பெட்டிகள், மின்சார கேபிள்களை பாதுகாப்பானமுறையில் சீரமைத்து மாற்றியமைக்க வேண்டுமென்றும், ரங்கா கார்டன் முழுவதும் மழைநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பை ஏற்படுத்தி, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை தடுக்க வேண்டுமென்றும், வளர்ந்துள்ள மரக்கிளைகளை அகற்றி, சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், அழகாகவும் பராமரிக்க வேண்டுமென்றும், தேவையற்ற குப்பைகளை 15 நாள்களுக்கு ஒருமுறை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மனு வழங்கினர்.

மனுவை பெற்றக் கொண்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பூமாலை பச்சை கிளிக்கு ஆற்காட்டில் பொன்.கு.சரவணன் தலைமையில் சிறப்பான வரவேற்பு

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தோப்புக்கானாஅருள்மிகு மூன்றாம் சனிக்கிழமையான 03.10.26 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண் பூமாலை பச்சைக்கிளிக்கு ஆற்காடு வணிகர் சங்க பேரமைப்பின் மாவட்ட



ஸ்ரீ கங்காதர ஈஸ்வரர் ஆலயத்தில் புரட்டாசி மாதம் முன்னிட்டு சனிக்கிழமை தோறும் பெருமாளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருவது வழக்கம் அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு டாள் ஆலயத்திலிருந்து பூமாலை பச்சைகிளி எடுத்துவரப்பட்டு பெருமாளுக்கு சாற்றுவது வழக்கம்.

மேலத்தால வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட தலைவரும், திருத்தேர் பணி குழு தலைவருமான பொன்.கு. சரவணன் சிறப்பான வரவேற்பு அளித்தார். இதில் ஆலய நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தேனி தர்மபுரி அழகிய பெருமாள் கோவிலில்

# வருஷாபிஷேகம் மற்றும் புரட்டாசி திருவிழா வெகு விமரிசை

தேனி மாவட்டம் தர்மபுரி கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அழகிய பெருமாள் திருக்கோவிலில் வருடாபிஷேக விழா மற்றும் புரட்டாசி வார திருவிழா மிகச் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக காளியம்மன், ஸ்ரீ ரெங்கநாதன் மற்றும் ஸ்ரீ தாளமுத்தையா திருக்கோவில்களுக்கு சென்று சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டன. தொடர்ந்து, திரளான பக்தர்கள் பெருமாளுக்கு பால், நெய், தயிர் உள்ளிட்ட மங்கல பொருட்களையும் பூஜை திரவியங்களையும் ஏந்தி ஊர்வலமாக கோவிலுக்கு வந்தடைந்தனர்.



அதன்பின்னர் விக்னேஸ்வர பூஜை, எஜமான அனுக்ஞை, வருணபூஜை, புண்ணியாகவாசம் ஆகிய புனிதம் தரும் சடங்குகள் நடைபெற்றன. பக்தர்களின் நல்வாழ்வுக்காகவும் ஊர்நன்மைக்காகவும் சுதர்ஷன ஹோமம், லெட்சுமி ஹோமம், நாராயண மூல மந்திர கொடிஹோமம் மற்றும் நவக்கிரக ஹோமங்கள் கணபதி கோஷங்கள் முழங்க சிறப்புற இயற்றப்பட்டன. ஹோமங்களை தொடர்ந்து ஸ்ரீ அழகிய பெருமாளுக்கு திருமஞ்சனம் (அபிஷேகம்) நடத்தப்பட்டு, பூர்ணாஹுதி அலங்காரத்துடன் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் விபூதி மற்றும் புனித பிரசாதங்கள் வழங்கப்பட்டன. மேலும், கிராமத்து பெண்கள் பக்தி பரவசத்துடன் பொங்கல் பானைகளை ஏந்தி ஊர்வலமாக சென்று கோவிலை அடைந்தனர். அங்கு சுடச்சுட பொங்கல் வைத்து அருள்மிகு அழகிய பெருமாளுக்கு படைத்து வழிபாடு செய்த பின், பொங்கல் பானைகளுடன் இல்லம் திரும்பினர். தொடர்ந்து, நேர்த்திக்கடனாக வளர்க்கப்பட்ட முளைப்பாரிகளை பக்தர்கள் தலையில் ஏந்தி ஊரை வலம் வந்து கோவில் வளாகத்தை சென்றடைந்தனர். இறுதியில், கோவிலில் இருந்து புறப்பட்ட முளைப்பாரி ஊர்வலம் வீரபாண்டி முல்லைப்பெரியாற்றுக்கு சென்று, ஆற்று நீரில் முளைப்பாரிகள் முறைப்படி கரைக்கப்பட்டன.

இந்த பிரம்மாண்ட வருஷாபிஷேகம் மற்றும் புரட்டாசி வார திருவிழாவிற்கான அனைத்து சிறப்பு ஏற்பாடுகளையும் அருள்மிகு ஸ்ரீ அழகிய பெருமாள் திருக்கோவில் விழாக்குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். விழா நாட்களில் தர்மபுரி கிராமமே பக்தி வெள்ளத்தில் மூழ்கி திளைத்தது குறிப்பிடத்தக்கது

# சிங்கிலிமேடு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால் சுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகம்

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி சிங்கிலிமேடு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் சம்ப்ரோக்ஷ விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் உமாபதி, செயலாளர் பிரபாகரன், பொருளாளர் விஷ்ணுகுமார், துணைத்தலைவர் விஸ்வநாதன், துணை செயலாளர் குமரவேல், ஆலோசகர் நாகதாஸ் , ஆன்மீக சிந்தனையாளர் சிவ பால கிருஷ்ணன் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று கோயில் விமானத்திற்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்





தொடர்ந்து மூலவர்களுக்கு சம்ப்ரோக்ஷம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாகபுழல் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் வழக்கறிஞர் புழல் பெ.சரவணன், விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாரதி சரவணன், ஆன்மீக சேவகர் பால் ராஜ்லு உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்ன தானம் வழங்கப்பட்டது.

# தமிழக வேளாண் வல்லுநர் முனைவர் இரா.வினோத் அவர்களுக்கு தேசிய அளவிலான "ஹரித் புரஸ்கார் 2024" விருது வழங்கி கௌரவம்

வேளாண் கல்வி, ஆராய்ச்சி, நூல்கள் வெளியீடு, மாணவர் மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலனுக்காக தொடர்ந்து சிறப்பாக பங்காற்றி வரும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் திருச்சி, குமுளூர் வேளாண் கல்வி நிறுவன உதவி பேராசிரியர் (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்) முனைவர் இரா. வினோத் அவர்களுக்கு, அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தின் (AIASA) தேசிய அளவிலான "ஹரித் புரஸ்கார் (பசுமை விருது) – 2024" வழங்கப்பட்டுள்ளது.

மத்திய உழவர் நலன் மற்றும் வேளாண் அமைச்சகத்தின் ஆதரவுடன், புதுடெல்லி அகில இந்திய வேளாண் மாணவர்கள் அமைப்பு மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் ஆகியவை இணைந்து, வேளாண் துறையில் சாதனை படைக்கும் பேராசிரியர்கள், வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் இந்த உயரிய தேசிய விருதை வழங்கி வருகின்றன. அந்த வகையில், வேளாண் துறையில் முனைவர் இரா. வினோத் மேற்கொண்டுள்ள தொடர்ச்சியான சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக அகில இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்டு இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. புதுதில்லியில் உள்ள பி.எச்.டி (PHD) வர்த்தக மற்றும் தொழில் வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற அங்கக மற்றும் இயற்கை நெல் உற்பத்தி முறைகள் குறித்த 5வது சர்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில் இவ்விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கம், ராய்ச்சூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேசியாவின் ஐ.பி.பி (IPB) பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய இந்நிகழ்வில், முன்னாள் மத்திய மனிதவள மேம்பாடு மற்றும் உயர்கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர் சத்யபால் சிங், மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் பத்மபூஷண் டாக்டர் ஆர். பி. சிங் உள்ளிட்ட துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு முனைவர் இரா. வினோத் அவர்களுக்கு விருது வழங்கி சிறப்பித்தனர்.




விருது பெற்றமை குறித்து பேசிய முனைவர் இரா. வினோத், "இந்த தேசிய விருது எனது தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல; வேளாண் சமூகத்திற்கும், விவசாயிகளுக்கும், இளைஞர்களுக்கும் தொடர்ந்து சலசலப் பின்றி சேவையாற்ற வேண்டிய எனது பொறுப்பை மேலும் அதிகரித்துள்ளது" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். நாட்டிற்கும் சமூகத்திற்கும் பங்காற்றும் வல்லுநர்களுக்கு கிடைத்துள்ள இந்த அங்கீகாரம், தமிழக வேளாண் துறைக்கும் பெரும் பெருமை சேர்த்துள்ளது என்று கூறியுள்ளார்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



காஞ்சிபுரத்தில் ரங்கசாமி குளம் பல வருடங்களாக பராமரிப்பு இன்றி காணப்பட்டது இதை சுத்தம் செய்யும் முயற்சியில் காஞ்சிபுரம் டிஜிட்டல் போட்டோ வீடியோ சங்கம் மற்றும் காஞ்சிபுரம் ரோட்டரி கிளப் இணைந்து மற்றும் பொதுமக்களும் இணைந்து இந்த ரங்கசாமி குலத்தை சுத்தம் செய்து இக்குளத்தை மேலும் பொதுமக்கள் காலையில் நடைபாதைக்கு உபயோகிக்கும் வண்ணம் மற்றும் குளத்தின் நீர் நிலையை சரி செய்ய உபயோகமாக இருக்கும்.

# இராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப மூலம் நெல் சாகுபடியை மேற்கொள்ள வேண்டுகோள்

இராணிப்பேட்டை மாவட்டத்தில் தற்போது சம்பா பருவத்தில் சுமார் 35000 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி எதிர்பாக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் முறையைப் பயன்படுத்தி சாகுபடி செலவு. தொழிலாளர் தேவை மற்றும் நீர் பயன்பாட்டை குறைத்து. நிலையான வேளாண்மையை மேற்கொள்ளலாம்.

நன்கு சமன்படுத்தப்பட்ட வயலில், முளை கட்டிய தரமான நெல் விதைகளை நேரடி நெல் விதைப்பு மூலம் நேரடியாக விதைப்பது இம்முறையின் சிறப்பம்சமாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைப்படி, நேரடி விதைப்பில் பொதுவாக ஒரு ஹெக்டேருக்கு சுமார் 60 கிலோ விதை பயன்படுத்தலாம். அதாவது ஒரு ஏக்கருக்கு சுமார் 24 கிலோ விதை தேவைப்படும்.

நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பத்தின் நன்மைகள்:

நீர் சேமிப்பு: தொடர்ந்து மண்ணில் நீர் நிரப்புதல் மற்றும் சேறாக்குதல் தேவையை நீக்குகிறது. இதன் மூலம் 15% முதல் 35% வரை பாசன நீரைச் சேமித்து, கடுமையான நிலத்தடி நீர் வற்றுவதைத் தடுக்கிறது.

உழைப்பு மற்றும் ஆற்றல் குறைப்பு: நாற்றங்கால் தயாரிப்பு, நாற்றுகளைப் பிடுங்குதல்




மற்றும் கையால் மீண்டும் நடுதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதால், உழைப்புப் பயன்பாடு சுமார் 40% குறைகிறது மற்றும் நீரை இறைப்பதற்கான ஆற்றல் தேவை 27% குறைகிறது.

வேர் வளர்ச்சி: வழக்கமான முறைகளில் ஏற்படும் இடமாற்ற அதிர்ச்சியை நாற்றுகள் அனுபவிக்காததால், ஆழமான, வலுவான வேர் அமைப்புகளுடன் ஆரோக்கியமான தாவரங்களை இது ஊக்குவிக்கிறது.

முன்கூட்டியே பயிர் முதிர்ச்சி: நடவு செய்யப்பட்ட நெல்லை விட 7 முதல் 10 நாட்கள் வேகமாகப் பயிர்கள் முதிர்ச்சியடைகின்றன. இது சரியான நேரத்தில் அறுவடை செய்யவும், நிலக்கடலை மற்றும் பயறுவகை போன்ற அடுத்தடுத்த சுழற்சிப் பயிர்களுக்குச் சுமுகமாகத் தயாராகவும் உதவுகிறது.

பயிர்க்கழிவு எரிப்பைக் குறைத்தல்: முன்கூட்டியே முதிர்ச்சியடையும் காலம், விவசாயிகளுக்குப் பருவங்களுக்கு இடையில் பயிர்க் கழிவுகளைத் திறம்பட நிர்வகிக்கக் கூடுதல் நேரத்தை அளிக்கிறது. இது வைக்கோல் எரிப்பதால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க உதவுகிறது.

அதிக இலாபம்: நீர். உழைப்பு மற்றும் மின்சார உள்ளீடுகளிலிருந்து ஏற்படும் ஒட்டுமொத்த உற்பத்திச் செலவுகளைக் குறைக்கிறது. இது விவசாயிகளுக்கான நிகரப் பொருளாதார வருவாயை நம்பகத்தன்மையுடன் மேம்படுத்துகிறது.

விதைப்பதற்கு முன் வயலை நன்கு சமன்படுத்தி, விதைகளை முறையாக முளைகட்டச் செய்து விதைக்க வேண்டும். விதைத்த பின் முதல் வாரத்தில் வயலில் அதிக நீர் தேங்காமல், தேவையான ஈரப்பதத்தை மட்டும் பராமரிப்பது அவசியம். விதைத்த 1421 நாட்களில் இடைவெளி மற்றும் பயிர் எண்ணிக்கையை சரிபார்த்து, தேவையான இடங்களில் களை நிர்வாகம் மற்றும் இடைவெளி நிரப்புதல் மேற்கொள்ள வேண்டும்.

"குறைந்த விதை குறைந்த செலவு குறைந்த நீர் பயன்பாடு நிலையான நெல் சாகுபடி" என்ற நோக்கில், ராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் வயல் மற்றும் நீர்வசதிக்கு ஏற்ப நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி பயன்பெறுமாறு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



பழனி சிவகிரி பட்டி எம் ஜி ஆர் நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் குடிநீர் இணைப்பிற்காக பள்ளம் தோண்டி ஏழு நாட்களை தாண்டி இன்னும் மூடவில்லை இதை தோண்டி பல குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும் இன்னும் குடிநீர் விநியோகம் இல்லை நிர்வாகம் பள்ளத்தை மூடாததால் பொதுமக்கள் போக்குவரத்து மிக சிரமமாக உள்ளது பேரூராட்சி அலுவலகத்தில் கேட்டால் அலட்சியமாக ஆள் இல்லை மெட்ரியல் இல்லை இன்னும் நாளாகும் என்றே சொல்கிறார்கள் எனவே உடனடியாக பள்ளத்தை மூடி குடிநீர் விநியோகத்தை சரி செய்ய பொதுமக்கள் கோரிக்கை



இராணிப்பேட்டை மாவட்டம் வேப்பூர் ஸ்ரீ பாலகுஜாம்பிகை சமேத ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் ஆலயத்தில் தேய்பிறை அஷ்டமி முன்னிட்டு மஹா தீபாராதனை நடைபெற்றது தொடர்ந்து பைரவர் சிறப்பு யாகம் 03.10.26 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்றதுபைரவர் சிறப்பு யாகத்தில் அனைவரும் கலந்து கொண்டு சக்தி மிக்க பைரவர் அருள்பெற்றனர்

# கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தூயமிக்கேல்ஆதிதூதர் ஆலைய பங்கு குடும்ப திருவிழா



திருவிழாவானது 25 092026 முதல் 410 2026 வரை நடைபெற்றது. முதல்நாள் மறை மாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசைஅவர்கள் கொடியேற்றி துவக்கிவைத்தார். குடும்ப மக்கள் தேர் திருவிழாவை சிறப்பாக நடத்தி சென்றார்கள். ஊர் மக்கள் வழியெங்கும் ஆண்டவருக்கு காணிக்கையாக பூமாலைகொடுத்துவழிபட்டனர்.. மக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நேற்று காலை சரியாக 10 . 40 மணி அளவில் பழனி ரயில் நிலையத்துக்கு வண்டி எண் 07 191 ஹைதராபாத்தில் இருந்து செங்கோட்டைவரைசெல்லும்வாராந்திரவிரைவுவண்டியை பழனிவந்தடைந்தது இதை பழனி ரயில் உபயோகிப்போர் நலச்சங்கம் சார்பாக வரவேற்று ரயில்வே அதிகாரிகளுக்கு மற்றும் ஓட்டுநர்களுக்கு சங்கத்தின் சார்பாக பொன்னாடை போர்த்தி வரவேற்றனர் இந்த நிகழ்ச்சியில் பழனி வந்தடைந்த ரயிலே பார்த்து பொதுமக்கள் மற்றும் பழனிவால் நகர மக்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தனர் அது சமயம் ரயில் உபயோகப்போர் சங்கத்தினரும் அருகில் இருந்தவர்களுக்கு விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார்



தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.10.2026) வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் காய்ச்சல் பிரிவு வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பார்வையிட்டு காய்ச்சல் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. சரவணகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA